தலைப்பு – 212 பரீட்சைகள் திணைக்களம் 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 212 - பரீட்சைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பரீட்சைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பரீட்சைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் பரீட்சைகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை பரீட்சைகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	பெறுமதி ரூபா 630,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள 1.3596 ஹெக்ரேயர் காணியின் சட்ட ரீதியான உரித்தை கையேற்கும் நடவடிக்கைகள் இது வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த காணி ரூபா 101,902,618.85 தொகையில் கையேற்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அனுப்பப்பட்டமையால் நிதி பாதீட்டு திணைக்களத்தில் இருந்து கோரப்பட்டிருந்தது. தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து வட்டியை நீக்குவதற்காக கலந்துரையாடலுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அந்த கலந்துரையாடலின் பின்னர் மீண்டும் அமைச்சரவைப் பத்திரம் திருத்தப்பட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காணியின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	மகாவலி அதிகார சபையினால் 2021 ஏப்ரல் 24 ஆந் திகதி பரீட்சைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட கொத்மலை பிரிவிற்கு உரிய ரிவர்சைட் தோட்ட மாளிகை மற்றும் இன்னுமொரு கட்டிடத்தை உள்ளடக்கிய 0.328 ஹெக்ரேயர் காணி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மதிப்பீடு செய்து நிதிச் சொத்துக்களின் சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை ஒன்று வழங்குவதற்கு 2024 ஏப்ரல் 22 ஆந் திகதிய 1/10/09 ஆம் இலக்க கடிதம் மூலம் மற்றும் மாகாண பிரதம மதிப்பீட்டாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு கிடைத்த பின்னர் கணக்கீடு செய்யப்படும்.	காணி மதிப்பீடு செய்து நிதிச் சொத்து கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
(iii)	திணைக்களத்தின் அச்சகப் பிரிவிற்கு 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 546,264,452 பெறுமதியான Wide Web Digital அச்சிடல் இயந்திரம் மீளாய்வாண்டின் போதும் நிதியல்லாச் சொத்துக் கூற்றில் உள்ளடக்கப்பட்டு சொத்தாக கணக்கீடு செய்யப்படவில்லை.	இந்த விடயம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2025 ஏப்ரல் மாதத்தின் போது சொத்து ஒன்றாக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படும்.	சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(iv)	திணைக்களத்திற்குச் சொந்தமான 24 வாகனங்களில் 09 வாகனங்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வாகனங்களை மதிப்பீடு செய்து நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும்.
(v)	மீளாய்வாண்டின் சிகாஸ் கணனி நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 275,174,790 பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படையின் கீழ் தீர்மானம் எடுக்கின்ற தரப்பினரின் தீர்மானங்களுக்கு போதியளவான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) முற்பணக் கணக்கு மீதி

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திணைக்களத்தில் சேவையாற்றியிருந்த போதும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 211,323 ஆன இடர் கடன் மீதி தபானவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கோரப்படாத சான்றிதழின் மூலம் கடன் மீதி தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பாக அந்த திணைக்களத்தில் காணப்படுகின்ற விசாரணை நடவடிக்கைகளின் காரணமாக இதுவரை மரணப் பணிக்கொடை செலுத்தப்படவில்லை.	தாபன விதிக் கோவையின் பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கு முடியுமான சகல முயற்சிகளும் எடுத்தல் வேண்டும். மரணப் பணக்கொடை செலுத்தும் போது உரிய கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான பிரகாரம் தரவுகள் பெறப்பட்டுள்ளமை ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் உறுதிப்படுத்தி குறித்துரைத்த கணக்கு மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் மூலம் பயன் படுத்தப்பட்ட நிதிப்பிரமானம் 113(6)(ஆ) இன் பிரகாரம் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 226,738 தொகையினை அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன் இந்த கடன் மீதி 03 இற்கும் 25 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சிற்கு உரியதாகும்.	உரியவரிடம் இருந்து நிலுவைப் பணத்தை பதிவளிப்பதற்கு கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பதிலளிக்கப்படாதிருந்தமையால் மீண்டும் அனுப்பப்பட்டிருந்த போதிலும் இன்னும் கடனாளியின் முகவரி பிழையாக இருந்ததாக அறிவித்து கடிதம் மீண்டும் வந்துள்ளது. கடன் அறவிடும் எதிர்கால மிகுதி நடவடிக்கைகளுக்காக சரியான குடியிருக்கும் முகவரியை அறியாதிருந்தமையால் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் ஏனைய கடனாளிகளின் நிலுவைக் கடன் மீதியில் ஒரு பகுதியாக 04 மாதத்தில் செலுத்தி பூர்த்தி செய்வதாக கடனாளி இணக்கம் தெரிவித்துள்ளார்.	கடன் மற்றும் முற்பணத்தை மீள அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(இ) கட்டுநிதி மீதி

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திறைசேரிக் கணனி அச்சிடலின் பிரகாரம் ஏனைய மூலங்களில் இருந்து கட்டுநிதி பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 626,530,588 ஆக இருந்த போதிலும் திணைக்களத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டு நிதி கணக்கு தொடர்பான கூற்றின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 55,491,999 ஆனமையால் அதற்கிடையே ரூபா 571,038,589 வேறுபாடு காணப்பட்டது.	எதிர்வரும் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ - 3 படிவம் முன்மொழியப்பட்டுள்ள பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	திறைசேரிக் கணனி அச்சிடலின் பிரகாரம் ஏனைய மூலங்களில் இருந்து பெறுவனவு மற்றும் திறைசேரி பெறுவனங்களில் இருந்து கிடைத்த செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 7,472,347,593 ஆக இருந்த போதிலும் திணைக்களத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி தொடர்பான கூற்றின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 6,901,309,000 ஆனமையால் அதற்கு இடையே ரூபா 571,038,593 வேறுபாடு காணப்பட்டது.	மேற்படி	மேற்படி

(ஈ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 என்ற திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை.	கணக்கேடுகளை நாளது வரையாக்குவதற்கு உத்தியோத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணச் செல்லல் வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளது வரையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(iii)	நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு நட்டப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	மேற்படி	இழப்பு நட்டப்பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(iv)	நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்கின்ற போது ஒரே தினத்தில் பணிகள் பலவற்றுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளாத பிரகாரம் பதிவேடுகள் தயாரித்து பேணிச் செல்வதற்கு அந்த அந்த பிரிவு மற்றும கணக்கு பிரிவு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	மேற்படி	செலுத்தும் போது ஒரே தினத்தில் பல பணிகளுக்கு செலுத்தாத பிரகாரம் பதிவேடுகளைத் தயாரித்து பேணிச் செல்லல் வேண்டும்.
(v)	நிதிப் பிரமாணம் 1647(உ) இல் காண்பிக்கப்பட்ட நியதிகளின் பிரகாரம் வாகன பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	வாகனப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிக்கவில்லை.

முன்னைய ஆண்டுக்குரிய பந்தியின் தொடர்பு	**அமுல்படுத்தப்படாத பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு**
154(6) அறிக்கையின் 1.6.1 (அ) (i)	காணி மதிப்பீடு செய்து கணக்குகளில் உள்ளடக்குதல் வேண்டும்.	1.6.1 (அ) (ii)
154(6) அறிக்கையின் 3.3	காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	1.6.1 (அ) (i)

3. நிதி மீளாய்வு

3.1. வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(i)	அகற்றப்படுகின்ற கடதாசியின் விற்பனை 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய ரூபா 21,387,554 தொகை வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் இருந்து இதுவரை அறவிடப்பட்டிருக்க வில்லை.	திணைக்களத்தால் அறவிட வேண்டிய பணத்தை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல சந்தர்ப்பங்களின் போது எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இலக்கம் 397063 என்ற ரூபா 170,400 பெறுமதியான காசோலை மூலம் 2022 ஆம் ஆண்டுக்குரிய அறவிட வேண்டிய தொகையில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் மேலும் ரூபா 21,387,554 தொகை திணைக்களத்திற்கு அறவிட வேண்டியிருந்தது.	பெற வேண்டிய மீதிகளை குறித்துரைத்த பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2024 ஆம் ஆண்டின் நிறுவனம் பரீட்சைகளை நடாத்தியதற்காக 03 அரச நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா	புகையிரத திணைக்களத்தால் ரூபா 83,797 மற்றும் 303740 ஆம் இலக்க காசோலை காலாவதியாகியதன் காரணமாக மீண்டும் தினம் நீடிப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தது.	மேற்படி

3,617,601 தொகை 2025 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட HDFC வங்கியில் 02 பரீட்சைகளுக்கான நிலுவை பணத்தை தீர்க்குமாறு உரிய வங்கிக்கு மீள் நினைவூட்டலும் அனுப்பப்பட்டிருந்தது. தொகை மதிப்பு புள்ளி விபர திணைக்களத்தின் கோரிக்கையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 02 பரீட்சைகளுக்கான நிலுவைத் தொகை முறையே ரூபா 234,603 மற்றும் ரூபா 92,648 வீதம் கிடைக்கப் பெற்ற இரண்டு காசோலைகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	

3.2 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) நிதிப்பிரமானம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும், சரியாகவும் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் மீளாய்வாண்டில் 26 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,312,300,000 ஆன தேறிய நிதியேற்பாட்டை ரூபா 3,659,824,352 சேமிக்கப்பட்டிருந்ததுடன் முறையே செலவின விடயங்கள் 2, 7 மற்றும் 17 இல் சேமிப்பு 100 சதவீதம் மற்றும் 50 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடையே மற்றும் 10 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலும் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒட்டு மொத்த நிதியேற்பாட்டில் 33 சதவீதம் சேமிப்பதற்கான நடைமுறை ரீதியான நிலைமைக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் மற்றும் நலிவான மதிப்பீடு அடிப்படைக் காரணமாக இருந்தது.	ஏ.சீ.ஏ – 2 (II) இன் மூலம் காண்பிக்கப்பட்ட பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயங்களுக்கான நிதியேற்பாடு சேமிப்பிற்கான காரணம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் உரிய செலவினங்கள் ஏற்படாமை மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 02/2024 இன் பிரகாரம் அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்யப்பட்டதன் காரணமாக மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களில் சேமிப்பு ஏற்பட்டிருந்தது.	மிகக் கவனமாக நடவடிக்கை எடுத்து நிதிப்பிரமாணம் 50(1) இன் பிரகாரம் நிதியேற்பாடு ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii) **நிறுவனம்சார் பரீட்சைகளை நடாத்துதல்.** மீளாய்வாண்டில் திணைக்களம் சார் பரீட்சைகள் 238 இனை நடாத்துவதற்காக ரூபா 920 மில்லியன் ஒதுக்கப்பட்டு 86 நிறுவனம் சார் பரீட்சைகள் நடாத்தியதன் காரணமாக ரூபா 603 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருக்கும் போது ஏனைய திணைக்களங்களின் நிறுவனம்சார் பரீட்சைகள் 86 இற்காக பரீட்சைத் திணைக்களத்தால் அதிகார பலம் இன்றி ரூபா 147 மில்லியன் தொகை அந்த நிறுவனங்களில் இருந்து பெற்று கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ஒரே விடயத்திற்கு இரண்டு தடவைகள் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த பிரகாரம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கும் போது அரசாங்க நிறுவனங்களின் பரீட்சைகளை நடாத்துவதற்கு நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகார பலம் இல்லாது இருக்கும் போது அவ்வாறு பணம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 156 மற்றும் தாபன விதிக் கோவையின் II ஆம் பகுதியின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கவனமாக நடவடிக்கை எடுத்து நிதிப்பிரமாணம் 50(1) இன் பிரகாரம் நிதி ஏற்பாடு ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய இலக்கம் 255/2017 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடு எல்லையில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் தபால் மற்றும் தொலைத்தொடர்பு செலவின விடயத்தில் சேமிப்பை விஞ்சி ரூபா 1,983,049 பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது.	சான்றிதழ் பத்திர வருமானம் திறைசேரியின் மூலம் கையளிக்கப்படுவதுடன் சான்றிதழ் பத்திரங்களுக்கு உரிய தபால் கட்டண செலவின விடயத்தில் தீர்த்து வைப்பதற்கு நிதியேற்பாடு பற்றாக்குறையினால் நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்பட வேண்டி ஏற்பட்டிருந்தது.	சகல பொறுப்புக்களையும் முறையானதாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்துதல் நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்குமாயின் அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு குறிப்பிடுகின்றோம்.	கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	பரீட்சைகள் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது பாடசாலைப் பரீட்சைகள் நடாத்துதல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு திட்ட முறைமையில் காணப்பட்ட நலிவின் காரணமாக நடாத்தப்பட்ட 03 பரீட்சைகளில் ஒரு பரீட்சையான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு பொதுவாக 7½ புள்ளிகள் (ஏழரை) வழங்குவதற்கு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமையால் அது தொடர்பாக போதியளவான உள்ளகக் கட்டுபாட்டு திட்ட முறைமை ஒன்று எடுக்க வேண்டியிருந்தமைக்கு கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக திணைக்களத்தினால் பதிலாக "5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக பொதுவாக புள்ளிகளை வழங்குவதற்குக் காரணமாக பாடசாலை பரீட்சை நடாத்துதல் தொடர்பாக உள்ளகக் கட்டுபாட்டு முறைமையில் காணப்பட்ட நலிவுகளின் காரணம் அல்லாமல் அதற்காக தொடர்பு படுத்தப்பட்ட வளவாளர் நபர்களின்	05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்காக பொதுப் புள்ளிகளை வழங்குவதற்கான காரணமாக பாடசாலை பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு திட்ட முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணம் அல்லாமல் அதற்காக தொடர்புபடுத்தப்பட்ட வளவாளர் நபர்களின் தனிப்பட்ட கவனயீனம் காரணம் ஆகும். அதன் பிரகாரம் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஆரம்ப உரிமை வழக்கில் கிடைத்த 286/2024 என்ற வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் இந்த வளவாளர்களுக்கு தண்டப்பணம் ஒன்று	பாடசாலை பரீட்சைகளை உள்ளடக்கிய சகல பரீட்சைகளையும் நடாத்துதலின் ஆரம்ப திட்டமிடல் கட்டத்தில் இருந்து பெறுபேறுகள் விநியோகித்தல் மற்றும் அதன் பின்னரான சகல முறைமைகளும் போதியளவான பிரகாரம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை பேணிச் செல்வதற்கு சரியான முறைமை, வழிகாட்டி மற்றும் மேற்பார்வைத் திட்ட முறைமை ஒன்று அறிமுகப்படுத்தி உள்ளகக்

தனிப்பட்ட காரணங்கள் ஆகும்'' என காபண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பரீட்சைகள் நடாத்துவதற்கு வளவாளர்களைத் தெரிவு செய்தல், அவர்களுக்கு வழிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதை உள்ளடக்கிய பரீட்சைகள் சார்ந்த பணிகளுக்கு உரிய ஒட்டு மொத்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் போதியளவான பிரகாரம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக குற்ற சட்டத்தின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகளும் செயற்படுத்தப்படுகின்றது.	கட்டுப்பாட்டை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	பெறுமதி	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை				
நிதிப்பிரமாணம் 104		பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளைக்கு களஞ்சியத்தில் இருந்து விநியோகிக்கப்பட்ட குரல் பதிவு செய்யும் 07 இயந்திரங்கள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்ட குரல் பதிவு இயந்திரங்கள் 16 ஆக 23 குரல் பதிவு இயந்திரங்கள் தொலைந்து போயிருந்த போதிலும் நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கால ரீதியில் நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்காக இரகசிய அச்சிடல் இயந்திரங்கள் 05 பயன்படுத்தி 3,250,715 வினாப் பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 546,264,452 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட வெப் டிஜிட்டல் அச்சிடல் இயந்திரம் 2024 ஆம் ஆண்டின் போது 1,721,753 வினாப்பத்திரங்கள் அச்சிடப்பட்டிருந்தது. அந்த அளவு மீளாய்வாண்டின் இரகசிய அச்சிடல் அச்சகத்தில் 05 அச்சிடல் இயந்திரங்கள் மூலம் அச்சிடப்பட்ட ஒட்டு மொத்த வினாப்பத்திரங்களின் அளவில் 34 சதவீதம் ஆகும். அதன் பிரகாரம் கிரயம் ரூபா 546,264,452 ஆன இயந்திரம் குறைவாக பயன்படுத்தப் பட்டிருந்தது.	பாடசாலை பரீட்சைகளுக்கு உரிய சகல வினாப்பத்திரங்களையும் அச்சிடல் பாடசாலை பரீட்சைகள் (இரகசிய) களஞ்சியத்திற்குரிய அச்சகத்திலும், டிஜிட்டல் அச்சிடல் அலகிலும் மேற்கொள்ளப்படுகின்றது. வினாப் பத்திரங்களை அச்சிடுவதைத் திட்டமிடும் போது பரீட்சைக்கு அநேகமாக காலம் தாழ்த்தி அச்சிடல் மேற்கொள்ளப்படாததுடன் அச்சிடப்படுகின்ற சந்தரப்பத்தில் தீர்மானித்தல் பரீட்சைகள் ஆணையாளரால் (இரகசிய பாடசாலை பரீட்சைகள்) தீர்மானிக்கப்படுகின்றது. வினாப்பத்திரங்களின் பக்க எண்ணிக்கை, பாடம் மற்றும் பகுதி, அச்சிடப்பட வேண்டிய அளவு, பொதியிடலின் முன்னுரிமை போன்ற விடயங்களின் அடிப்படையிலும் அதன் இரகசியத் தன்மை தொடர்பாகவும் கவனத்தில் கொண்டு டிஜிட்டல் அச்சிடலில் அல்லது இரகசிய அச்சகத்தில் அச்சிடப்படுகின்றது. அதன் பிரகாரம் டிஜிட்டல் அச்சிடல் பிரிவின் மூலம் அந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு அது டிஜிட்டல் அச்சிடல் இயந்திரம் மூலம் அல்லது Turnkey அச்சிடல் இயந்திரம் மூலம் அச்சிடப்படுகின்றது.	உரிய தேவையினை சரியாக இனங்கண்டு சொத்துக்கள் கொள்வனவு செய்ய வேண்டியதுடன் கொள்வனவு செய்த இயந்திரங்கள் உச்ச இயலளவுடன் பயன்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ)	வெப் ஜிட்டல் இயந்திரத்தை பழுது பார்த்தல் மற்றும் சேவை உடன்படிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 12,488,128 மற்றும் ரூபா 1,895,080 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்கு ஆரம்பமாக முதன்மையாக பயன்படுத்தாமையின் காரணமாக அந்த அந்த தேவைகளின் பிரகாரம் வினாப்பத்திரங்கள் அச்சிடுவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் பொதியிடல் வசதிகள் இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிரகாரம் வினாபத்திரங்கள் பொதியிடுவதற்கு மேலதிக கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.	அச்சிடல் இயந்திரம் 2024 ஆம் ஆண்டின் போது செயலிழந்த சந்தர்ப்பத்தின் போது இயந்திரத்தின் உள்நாட்டு அதிகாரம் பெற்ற முகவர் கம்பனியின் மூலம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. இயந்திரத்தின் உத்தரவாத காலம் முடிவடைந்த பின்னர் வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. உரிய அச்சிடல் இயந்திரம் மூலம் புள்ளி வழங்கும் நடைமுறை, தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெறுபேறு அட்டவணை, பரீட்சை மேற்பார்வையாளரின் நாட்குறிப்புக்கள், மதிப்பீட்டு நிலையங்களின் நாட்குறிப்புக்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய ஆவணங்களும் அச்சிடப்படுகின்றது. வினாப்பத்திரம் பொதியிடல் பணிகளுக்காக உள்ள இயந்திரத்தின் ஒரு பகுதி திணைக்களத்திற்கு தேவையான மற்றும் பொருத்தமில்லாது இருந்தமையால் அதனைப் பயன்படுத்தாமல் இது வரை அந்தப் பணிகள் மேற்கொள்கின்ற வகையில் அனுபவம் உள்ள பதவியணியினரை ஈடுபடுத்தி இரகசிய ஆவணங்கள் பொதியிடல் மேற்கொள்ளப்படுகின்றது.	மேற்படி
(இ)	வினாப்பத்திரங்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்காக ரூபா 8,428,637 பெறுதியான வெப் டிஜிற்றல் அச்சிடல் இயந்திரத்தின் Wrapping Solution) பகுதி ஒன்று 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த	இயந்திரத்தை பழுது பார்த்து திணைக்களத்தின் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக Heidelberg இயந்திரங்களின் உள்நாட்டு முகவர் நிறுவனத்தை உள்ளடக்கிய 04 நிறுவனங்களில் இருந்து	இயந்திர உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் தொடர்பான சகல பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட

போதிலும் திணைக்களம் தற்போது பயன்படுத்துகின்ற இரகசிய ஆவண பொதியிடல் செயற்பாடுகளுடன் அந்த பகுதி ஈடுகொடுக்காமையின் காரணமாக இதுவரையும் அந்த இயந்திரப் பகுதி விளைவற்றுக் காணப்பட்டது.	மதிப்பீடு கோரப்பட்டதுடன் எந்த ஒரு நிறுவனமும் மதிப்பீடு சமர்ப்பித்திருக்கவில்லை. அரசாங்கத்தின் அச்சகத்தில் இருந்து இந்த இயந்திரத்தை பழுது பார்ப்பதற்காக கோரப்பட்ட போதும் அதற்காக பதிலளிக்கப்படாது இருந்ததுடன் மீண்டும் இயந்திரத்தின் உள்நாட்டு முகவர் நிறுவனத்தை விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனம் அதற்காக பதிலளித்திருக்கவில்லை.	நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளில் பரீட்சைப் பெறுபேறுகள் பொது மக்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களின் போது விநியோகிப்பதற்கு இலகுவான வகையில் அந்த பெறுபேறு ஆவணங்களை தரவேற்றம் செய்தல் (Scan) செய்து வைக்கக் கூடிய முறையில் மென்பொருள் ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2024 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் ஒதுக்கப்பட்ட ரூபா 15 மில்லியன் மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டம் கைளிக்கப்பட்டுள்ளது.	செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை கால ரீதியில் மீளாய்வு செய்து எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைதல் வேண்டும்.

4.3 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம்	திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்காக பிணை வைப்பு கணக்கு திறப்பதற்கு தேவையான விண்ணப்பங்கள்	அரச நிதி சுற்றறிக்கை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்

	அதிகாரத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள், அளவு, முறைமையைத் தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக அமைச்சின் செயலாளருக்கு முடியுமாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் திணைக்களத்தின் பொறுப்புக்களில் ஈடுபடுகின்ற எந்த ஒரு உத்தியோகத்தரும் பிணை வைத்திருக்கவில்லை.	கோரப்பட்டதுடன் தற்போது கிடைத்துள்ள விண்ணப்பங்கள் தேசிய சேமிப்பு வங்கிக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை கையளித்துள்ள இருபது உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக் கணக்கில் முதலாவது மற்றும் இரண்டாவது தவணைப் பணம் 2025 – மார்ச், ஏப்ரல் சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.

4.4 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குதல், பதவி உயர்வு வழங்குதல், ஓய்வு பெற்றுச் செல்வதற்காக பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற க.பொ.த (சா. தரம்), க.பொ.த (உ. தரம்) பரீட்சைகளின் பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அரசாங்க நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 7,958 விண்ணப்பங்களின் பெறுபேறுகள் உறுதிப்படுத்தாமல் எஞ்சியிருந்தது.	சான்றிதழ் பத்திரக் கிளையில் 37 உத்தியோகத்தர்களுக்கு இடையே பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் கடமை நடவடிக்கைகள் கையளித்தல் 24 பேர்களுக்கு மாத்திரமே கையளிக்கப்பட்டிருந்தது. பதவியணியினர் பற்றாக்குறையினால் இந்த நடவடிக்கைகள் தாமதம் அடைந்துள்ளது. மேலும் இந்த பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் போது ஆவணப்படுத்தப்பட்ட கடமைகளில் ஒவ்வொரு படிமுறைக்காக கணிசமான காலம் எடுக்கின்றமையும் அதற்கு தாக்கமளித்திருந்தது. பெறுபேறுகளை உறுதிப்படுத்தலை துரிதப்படுத்துவதற்காக ஆவண மயப்படுத்தப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக இணைய வழி பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் முறைமை ஒன்றை ஈடுபடுத்தும் இயலுமை தொடர்பாக ஆய்வு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த உறுதிப்படுத்தலை விரைவாக பூர்த்தி செய்யுமாறு உத்தியோகத்தர்களுக்கு	பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் திட்ட முறைமையை முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ளல் அரச சேவைக்கு தகமை பெற்ற உத்தியோகத்தர்களை உள்ளடக்க வேண்டியிருந்தமையால் இந்த பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்காக முறையான மற்றும் விரைவான வேலைத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	
(ஆ)	திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையதளம் மற்றும் ஈ சேவைக்குரிய சேவை உடன்படிக்கை 2021 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் முடிவடைந்திருந்த போதிலும் உத்தியோகபூர்வ இணையதளத்தை நாளது வரையாக்குவதற்கு 2025 ஏப்ரல் 21 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	தற்போது பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மாதிரிகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரைவாக மிகுதி நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் மற்றும் ஈ சேவை வீழ்ச்சியடையாமல் பேணிச் செல்வதற்கு பாதுகாப்பான முறையான பாதுகாக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் இரகசியத் தன்மையை பாதுகாத்து பேணிச் செல்வதற்கும் அதிகாரத் தரப்பினர் பொறுப்பாக இருக்க வேண்டியுள்ளதுடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு தனித்துவமான இரகசிய தன்மை மற்றும் நம்பத்தன்மையின் அணைத்து அம்சங்களையும் பகுப்பாய்வு செய்து மிகவும் பொருத்தமான முறைமை ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தமையால் தகவல் தொழில் நுட்ப அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் தொடர்ச்சியாகப் பெற்று இந்த உத்தியோக பூர்வ இணைய தளம் மற்றும் ஈ சேவையை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.
(இ)	**வியன்புர உத்தியோக பூர்வ வீடுகளை கொள்வனவு செயதல்**		
(i)	பரீட்சைகள் நடைபெறுகின்ற கால எல்லையின் போது பாடசாலை பரீட்சை ஒழுங்கமைப்பு மற்றும் இரகசிய (பாடசாலைப் பரீட்சைகள்), இரகசிய (நிறுவனம்சார் பரீட்சைகள்) மதிப்பீடு (பாடசாலை பரீட்சைகள்) போன்ற கிளைகளில் சேவையில்	உத்தியோக பூர்வ இல்லங்களுக்காக விண்ணப்பித்த இரகசியப் பிரிவில் பதிவினை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு அரச நிர்வாக அமைச்சுக்கு உரிய உத்தியோக பூர்வ இல்லங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாக	அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ள விடயங்கள் அமைச்சரவையினால் திருத்தப்படல் வேண்டும். இல்லையாயின் தீர்மானிக்கப்பட்ட

	ஈடுபட்டிருக்கின்ற பதவி நிலை உத்தியோகத்தர்கள் நடு இரவு வரை சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்தமை காரணமாக அவர்களுக்கு திணைக்களத்தில் அருகில் உத்தியோக பூர்வ வீடு ஒன்றை வழங்கும் தேவை ஒன்று காணப்படுகின்றமையை சுட்டிக் காட்டி அமைச்சரவை அங்கீகாரத்தில் இருந்து பெறப்பட்ட ரூபா 34,700,936 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 03 உத்தியோக பூர்வ இல்லங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அங்கீகாரத்திற்கு முரணாக உத்தியோகத்தர்கள் மூன்று பேர் மாத்திரம் உத்தியோக பூர்வ இல்லங்களைப் பெற்றுக் கொள்வதற்கு திணைக்களம் தீர்மானித்ததன் காரணமாக அநேகமான உத்தியோகத்தர்களுக்கு முகங்கொடுக்கின்ற தங்குமிட பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.	இருந்தமையால் உத்தியோக பூர்வ இல்லங்களுக்காக விண்ணப்ப பத்திரம் சமர்ப்பித்தல் ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக பூர்வ இல்லத்தை வழங்க முடியுமாக இருந்தது.	நோக்கங்களுக்கு வீடுகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	வியம்புர மாடி வீட்டு தொகுதியின் 03 உத்தியோக பூர்வ இல்லங்கள் 2023 ஆகஸ்ட் 29 ஆந் திகதி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த 03 உத்தியோக பூர்வ இல்லங்களில் இரண்டு கையளிக்கப்பட்ட திகதியில் இருந்து 2025 சனவரி 01 வரை 16 மாதங்களும் ஏனைய உத்தியோக பூர்வ இல்லம் கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 08 வரை 19 மாதங்களும் விளைவற்றுக் காணப்பட்டது.	நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 2023 ஆகஸ்ட் மாதம் 29 ஆந் திகதி உத்தியோக பூர்வ இல்லம் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட போதும் உத்தியோக பூர்வ இல்லங்களில் குடியிருப்பதற்காக தேவையான மின்சார துணைப்பாகங்கள், Gass Burner பொருத்துதல் மற்றும் வளிப்பதனாக்கி வசதிகள் தயாரிக்கும் பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்தது. தற்போது அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் விரைவாக உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்	வீடு, அமைச்சரவை குறிப்பில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களின் பிரகாரம் மற்றும் உரிய வழிகாட்டியின் பிரகாரம் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தகமை பெற்ற உத்தியோகத்தர்களை இனங்காணல், வீடுகளைக் கையளித்தல், வீட்டை மீண்டும் கையேற்றல், உடன்படிக்கையில் கைச்சாத்திடல், பராமரிப்பு நடவடிக்கைகள் போன்றவைகளாக உள்ளகக் கட்டுப்பாட்டுடன் வழிகாட்டி ஒன்று தயாரித்து ரூபா 34,700,936 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 03 வீடுகள் இலக்கிடப்பட்ட பிரகாரம் ஈடுபடுத்தக் கூடிய வகையில் திட்டமிடப்பட்ட முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேற்படி
(iv)	உத்தியோகத்தர் தொகுதியின் வீடமைப்பு தேவையை தீர்ப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட 03 வீடுகளில் 02 வீடுகள் 2025 சனவரி 01 ஆந் திகதி தனி வீடு ஒன்றாக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	மேற்படி	அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானம் எடுத்த விடயங்கள் அமைச்சரவையினால் திருத்துதல் வேண்டும். அவ்வாறு இல்லையாயின் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்கு வீடுகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள், ஏற்பாடுகள், பரிந்துரைகளை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை நிறுவனத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்கள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2024 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட ஆணையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) இற்கு மேலதிகமாக மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுவதுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான கணக்காளர் பதவியில் வேலை	திணைக்களத்தை வலுப்படுத்தும் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்றை ஸ்தாபித்து எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அமைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை 15 ஆக இருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை 05 மாத்திரம் விநியோகிக்கப்பட்டதுடன் 2024 யூன் மாதத்தின் பின்னர் கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை.	மேவுகைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தர் பதிலீடு இன்றி இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட விடயங்களின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஏனைய உத்தியோகத்தர்கள் சந்தரப்ப சூழ்நிலையின் பிரகாரம் ஏனைய பிரிவுகளில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
(ஆ)	நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளரால் திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் பங்குபற்றி அந்த நடவடிக்கைகள் மற்றும் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் வெளிப்படுத்துவதற்கு பயன் படுத்தப்படுகின்ற உள்ளக தெரிவினை முறைமைப்படுத்துதல் மற்றும் போதியளவான பிரகாரம் தொடர்ச்சியாக ஆய்வினை சுகந்திரமாகவும் மதிப்பீடு நடாத்திச் செல்ல வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் 2024 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றலைப் பரீட்சிக்கும் போது நிறுவனத்தின் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கும் மற்றும் வெளிப்படுத்திக் கொள்வதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டு திட்டத்தைப் பரீட்சிப்பதற்கும் போதியளவான காலம் செலவிடப்படாது இருந்ததாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மேற்படி நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு திட்டத்தை பரீட்சிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.